Aevea

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR), TIRUCHIRAPPALLI.
**O.S No. 253/2022**
**PW.1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | திரு. சங்கப்பிள்ளை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th day of June 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

28.05.2015– அன்று ஷபீனா பேகம் அவர்களுக்கு சம்சுதின் எழுதிக் கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ. 1** ஆகும்.

12.08.2021– ஷபீனா பேகம் அவர்களால் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் (பதிவு செய்யப்படாதது) **வா.த.சா.ஆ. 2** ஆகும்.

12.11.2021 அன்று பைரவி அவர்களுக்கு ஷபீனா பேகம் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ. 3** ஆகும்.

01.12.2021– அன்று ஷம்ஷாத் பேகம் அவர்களுக்கு ஷபீனா பேகம் எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ. 4** ஆகும்.

01.04.2022 – அன்று வாதியாகிய நான் பிரதிவாதிகளுக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் சேர்த்து அனுப்பிய அறிவிப்பின் அலுலவக நகல் **வா.த.சா.ஆ. 5** ஆகும்.

அந்த அறிவிப்பை முதல் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ. 6** ஆகும்.

அந்த அறிவிப்பை இரண்டாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ. 7** ஆகும்.

அந்த அறிவிப்பை மூன்றாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ. 8** ஆகும்.

13.04.2022 – அன்று பிரதிவாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு **வா.த.சா.ஆ. 9** ஆகும்.

01.01.2010 முதல் 27.03.2022– வரை உள்ள காலத்திற்கு உரிய தாவா சொத்து தொடர்பான வில்லங்கச்சான்றின் கனிணி நகல் **வா.த.சா.ஆ. 10** ஆகும்.

14.12.2023– அன்று துறையூர், நீதித்துறை நடுவர் குற்றவியல் பல்வகை மனு எண். 5170/2022–ல் பிறப்பித்த உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ. 11** ஆகும்.

வாதி தரப்பு சான்று ஆவணம் 11 பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது.

Adocw

பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியெப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.